**சுருக்கம்**

பள்ளிக் கல்வி –அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப்பெட்டி, வண்ணப்பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

– – – ––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

பள்ளிக் கல்வி (எஸ்1) துறை

அரசாணை (நிலை) எண்.12

நாள் : 18.01.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
தை–4

படிக்கப்பட்டவை:–

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 26.8.2011.

2. இணை இயக்குநர் (மேநிக) பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6. கடிதம் ந.க.எண். 1/பிசி/2011 நாள் 28.9.2011.

– – – –

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 26.8.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

> ‘‘1985 ஆம் ஆண்டிலிருந்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களிடம் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் நல்லெண்ணத்துடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப்பெட்டி, அதாவது Geometry Box, கிராமப்புற மாணவ மாணவியர்களுக்கு இதுவரை கிடைக்கப் பெறாத வண்ணப் பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் போன்றவை வரும் கல்வியாண்டு முதல் வழங்கப்படும்’’.

2. மேற்காண் அறிவிப்பு தொடர்பாக விரிவான கருத்துருவினை செலவின விவரங்களுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு இணை இயக்குநர் (மேநிக) கேட்டுக் கொள்ளப்பட்டார். அதனடிப்படையில் இணை இயக்குநர் (மேநிக) அவர்கள் அரசு /அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கணித உபகரணப்பெட்டி (Geometry box)

வண்ணப்பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் ஆகியவற்றை 2012–2013–ம் கல்வியாண்டு முதல் கீழ்க்கண்டவாறு வழங்கலாமென தெரிவித்துள்ளார்.

<u>புத்தகப்பை:</u>

1 முதல் 3 வகுப்புகள் வரை – சிறிய அளவு (Small size)
4 முதல் 7 வகுப்புகள் வரை – நடுத்தர அளவு (Middle size)
8 முதல் 12 வகுப்புகள் வரை – பெரிய அளவு (Large size)

இம்மூன்று அளவுகள் கொண்ட புத்தகப் பைகளின் தோராய விலை ரூ.75, ரூ.100 மற்றும் ரூ.125 என மதிப்பிடலாம். இதனால் 92,28,374 மாணவ / மாணவியர் பயன்பெறுவர்.

<u>கணித உபகரணப் பெட்டி:</u>

6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இலவச கணித உபகரணப் பெட்டிகள் வழங்கலாம்.ஒரு கணித உபகரணப் பெட்டியை மாணவ / மாணவியர்கள் இரண்டு கல்வி ஆண்டுகளுக்கு பயன்படுத்தலாம். எனவே, ஒவ்வொரு கல்வியாண்டிலும் 6,8,10 வகுப்புகள் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு இலவச கணித உபகரணப் பெட்டிகள் வழங்கலாம். இதன் தோராயவிலை ரூ.35 என மதிப்பிடலாம். இதனால் 46,01,572 மாணவ/மாணவியர் பயன்பெறுவர்.

<u>வண்ணப்பென்சில்கள்:</u>

1 முதல் 5 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வண்ணப் பென்சில்கள் வழங்கலாம். இவ்வகை வண்ணப் பென்சில்கள் அளவில் பெரியதாகவும் (long size) இரு முனைகளில் இரு வெவ்வேறு வண்ணங்கள் கொண்டதாகவும் இருக்கும். வண்ணப் பென்சில்கள் அடங்கிய பெட்டி ஒன்றுக்கு உத்தேசமாக ரூ.20 என மதிப்பிடலாம். இதனால் 35,00,556 மாணவ/மாணவியர் பயன்பெறுவர்.

<u>புவியியல் வரைபடங்கள்:</u>

முதல் ஆண்டில் 6 முதல் 10 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு புவியியல் வரைபடங்கள் வழங்கலாம். இரண்டாம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 6–ம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு மட்டும் வழங்கலாம்.ஒரு புவியியல் வரைபடத்தின் தோராய விலை மதிப்பு ரூ.50 எனக் கொள்ளலாம். இப்புவியியல் வரைபடங்கள் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் அச்சிட்டு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார். இதனால் 46,01,572 மாணவ/மாணவியர் பயன்பெறுவர்.

3) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க 2012–2013ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கணித உபகரணப்பெட்டி, (Geometry box) வண்ணப்பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் ஆகியவைகளை கீழ்க்கண்டவாறு வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

**(i) <u>புத்தகப்பைகள்:</u>**

1 முதல் 3 வகுப்புகள் வரை – சிறிய அளவு (Small size)
4 முதல் 7 வகுப்புகள் வரை – நடுத்தர அளவு (Middle size)
8 முதல் 12 வகுப்புகள் வரை – பெரிய அளவு (Large size)

இம்மூன்று அளவுகள் கொண்ட புத்தகப் பைகள் வழங்கப்படும்.

**(ii) <u>கணித உபகரணப் பெட்டி:</u>**

6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இலவச கணித உபகரணப் பெட்டிகள் வழங்கலாம். ஒரு கணித உபகரணப் பெட்டியை மாணவ / மாணவியர்கள் இரண்டு கல்வியாண்டுகளுக்கு பயன்படுத்தலாம். எனவே, ஒவ்வொரு கல்வியாண்டிலும் 6,8,10 வகுப்புகள் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு கணித உபகரணப் பெட்டிகள் வழங்கப்படும் .

**(iii) <u>வண்ணப்பென்சில்கள்:</u>**

1 முதல் 5 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வண்ணப் பென்சில்கள் வழங்கலாம். இவ்வகை வண்ணப் பென்சில்கள் அளவில் பெரியதாகவும் (long size) இரு முனைகளில் இரு வெவ்வேறு வண்ணங்கள் கொண்டதாகவும் இருக்கும். வண்ணப் பென்சில்கள் அடங்கிய பெட்டி ஒன்று வழங்கப்படும்.

**(iv) <u>புவியியல் வரைபடங்கள்:</u>**

2012–2013ஆம் கல்வி ஆண்டில் 6 முதல் 10 வகுப்புகள் வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு புவியியல் வரைபடங்கள் வழங்கலாம். 2013–14 கல்வி ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 6–ம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

4) புவியியல் வரைபடங்களை தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் அச்சிட்டு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5) இத்திட்டத்தினை சரியாக செயல்படுத்த ஏதுவாக முறையான கொள்முதல் நடைமுறைகளை (Appropriate Procurement Procedure) பின்பற்றி கல்வியாண்டின் தொடக்கத்திலேயே கற்றலுக்கான பொருட்களை வழங்கிட ஏதுவாக கொள்முதல் நடவடிக்கைகளை முடித்திட பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

6) இத்திட்டத்தினை 2012–13 கல்வி ஆண்டு முதல் செயல்படுத்திட தேவையான நிதியினை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்திட ஏதுவாக கருத்துருவினை நிதித் (கல்வி II) துறைக்கு சமர்ப்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

7) இந்த அரசாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா. எண். 01/DS(KM)/Edn-II/2011, நாள்: 04.01.2012 –ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6
தொடக்கக் கல்வி இயக்குநர்,
சென்னை–6
மாநில திட்ட இயக்குநர்
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி (ம) பயிற்சி இயக்குநர்,
சென்னை6

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலரின் தனிச்செயலர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9
நிதித் (வரவு/செலவு/பொது–I, II)துறை, சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.